Source: *Tamil Murasu*, p3
Date: 30 June 2016

சிங்கப்பூரில் 3வது தெற்காசிய புலம்பெயர்ந்தோர் மாநாடு

'இருவழி தொடர்பு மூலம் வளர்ச்சி'

முஹம்மது ஃபைரோஸ்

தெற்காசிய புலம்பெயர்ந்தோர் மாநாடு மூன்றாவது முறையாக அடுத்த மாதம் புதிய இலக்குடன் சிங்கப்பூரில் நடைபெறவிருக்கிறது.

சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழகத்தின் தெற்காசிய கல்வி ஆய்வுக் கழக ஏற்பாட்டில் ஜூலை 18, 19 ஆகிய தேதிகளில் ராஃபிள்ஸ் சிட்டி மாநாட்டு மையத்தில் இந்நிகழ்ச்சி நடைபெறவுள்ளது. இவ்வாண்டு மாநாட்டுக்கான கருப்பொருள் 'இருவழி தொடர்பு மூலம் வளர்ச்சி: தெற்காசிய வாய்ப்பு' என்பதாகும்.

இதில் 1,000க்கும் மேற்பட்ட பிரமுகர்களுடன், இந்த வட்டாரத்தின் முன்னணி கொள்கை வகுப்பாளர்கள், வர்த்தகத் தலைவர்கள், கல்வியாளர்கள், குடிமை சமூகத் தலைவர்கள் போன்றோர் கலந்துகொள்வார்கள்.

இதற்கு முன்பாக 2011, 2013 ஆம் ஆண்டுகளில் நடந்தேறிய முதல் இரண்டு மாநாடுகளின் வெற்றியைத் தொடர்ந்து, புத்துயிர் பெற்று எழுகின்ற தெற்காசியாவின் அதிவேக வளர்ச்சியில் பிரமுகர்கள் ஒரு சமூகமாக, முழுமையாக பங்கேற்க இவ்வாண்டின் மாநாடு வாய்ப்பளிக்கும்.

சிங்கப்பூர் பிரதமர் லீ சியன் லூங், இந்தியாவின் முன்னாள் வெளியுறவுச் செயலாளர் ஷியாம் சரண் ஆகியோருக்கு இடையே ஜூலை 18ஆம் தேதியன்று நடைபெறவிருக்கும் கலந்துரையாடல் மாநாட்டின் சிறப்பு அம்சமாக விளங்கும்.

அந்நிகழ்ச்சியில் 'தெற்காசிய புலம்பெயர்ந்தோர் 2016–இன் தலைசிறந்த உறுப்பினர்' விருதைத் தெற்காசிய கல்வி ஆய்வுக் கழகம் வழங்கும்.

மாநாட்டின் தொடக்க நிகழ்ச்சியில் இலங்கை பிரதமர் ரணில் விக்ரமசிங்கே முக்கிய உரை நிகழ்த்துவார்.

இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், பங்ளாதேஷ், ஆஃப்கானிஸ்தான், ஈரான், அமெரிக்கா, மலேசியா உள்ளிட்ட நாடுகளைப் பிரதிநிதித்து மூத்த அரசியல், வர்த்தகத் தலைவர்கள் தெற்காசியாவின் முதலீட்டு வாய்ப்புகள் பற்றி கலந்துரையாடுவர்.

முதல் நாள் மாநாட்டில் 'Engineered for Success' எனும் தலைப்பில் சிங்கப்பூரின் முதல் பொறியாளர் டாக்டர் ஏ. விஜயரத்னத்தின் வாழ்க்கை வரலாறு, தெற்காசிய கல்வி ஆய்வுக் கழகத்தின் மதிப்புமிக்க சிறப்பு ஆய்வாளரான டாக்டர் துவ்வுரி சுப்பாராவ் எழுதிய 'Who Moved My Interest Rates' ஆகிய இரு நூல்கள் வெளியிடப்படும்.

உலகெங்கும் வாழும் தெற்காசிய வம்சாவளியினர் ஒன்றுகூடி தத்தம் தாயகங்களின் எதிர்காலத்தைப் பற்றி கலந்தாலோசிக்கும் தளமாக இவ்வாண்டின் தெற்காசிய புலம்பெயர்ந்தோர் மாநாடு விளங்கும் என்றார் தெற்காசிய



3வது தெற்காசிய புலம்பெயர்ந்தோர் மாநாட்டில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்கிறார் இலங்கை பிரதமர் ரணில் விக்ரமசிங்கே. **கோப்புப் படம்**

கல்வி ஆய்வுக் கழகத்தின் தலைவர் கோபிநாத் பிள்ளை.

மாநாடு தொடர்பான விவரங்களை நேற்றைய செய்தியாளர் மாநாட்டில் திரு கோபிநாத் வெளியிட்டார்.

"தெற்காசியாவுக்கான எதிர்கால கண்ணோட்டம் பிரகாசமாக உள்ளது. இந்தியாவின் அண்மைய திட்டங்களின்வழி பரந்த பொருளியல் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இவை அனைத்துலக வர்த்தக சமூகத்தில் கிட்டத்தட்ட எல்லாத் துறைகளிலும் ஏராளமான வாய்ப்புகளை வழங்குகின்றன," என்றும் கூறினார் வெளியுறவு அமைச்சுக்கான பொதுத் தூதருமான திரு கோபிநாத்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.